**நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.**

**முன்னிலை : திரு.அ. விஜயபாரதி, பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, சிவகாசி.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை

**சி.ஆர்.எம்.பி.எண்.69/2026**

**பி.ஆர்.எண்.09/2026**

ஜானகிராமன் (வயது 36/2025),
த/பெ.கிருஷ்ணமூர்த்தி,
க.எண்.7 வனசக்தி நகர் விரிவாக்கம்,
நேருதெரு, கொளத்தூர்,
திருவள்ளூர். ..... மனுதாரர்/எதிரி/சொத்தின் உரிமையாளர்

/எதிராக/

அரசுக்காக: சார்பு ஆய்வாளர்,
சிவகாசி கிழக்கு காவல் நிலையம்,
குற்ற எண்.719/2025,
U/s. 9(B)(1)(b) Indian Explosive Act ...... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு 11.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சிவசுப்பிரமணியன் பி.ஏ.பி.எல்., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பின் பதிலை பெற்றும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனுவை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்/சொத்தின் உரிமையாளர்/எதிரி தரப்பில் பி.என்.எஸ்.எஸ்.பிரிவு 497 மற்றும் 503–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில், மனுதாரர் அனுப்பன்குளம் கிராமம், சிவகாசியிலிருந்து சாத்தூர் செல்லும் பிரதான சாலையில் டிமோ டிஸ்பிளே கிராக்கர்ஸ் மற்றும் ஓவியா கிராக்கர்ஸ் என்ற பெயரில் சொந்தமான இரண்டு பட்டாசு கடைகள் வைத்து தொழில் செய்து வருகிறார். கடந்த தீபாவளியின்போது சிவகாசியிலிருந்து பட்டாசுகளை வாங்கி சென்னைக்கு வியாபாரம் செய்வதற்காக கொண்டு சென்றிருந்தார். ஆனால், பட்டாசுகளை சென்னையில் வியாபாரம் செய்ய இயலாததால் அவைகளை வாகனங்கள் மூலம் ஏற்றி சிவகாசிக்கு கொண்டுவந்து தனக்கு சொந்தமான உரிமம் பெற்ற பட்டாசு கடைகளில் மனுதாரர் வைத்திருந்தார். கடந்த 14.12.2025 ஆம் தேதியன்று சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தினர் மனுதாரரிடமிருந்த ஆவணங்களை பார்வையிடாமல்,

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

சுமார் 24 இலட்சம் மதிப்புடைய பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டைப்பெட்டிகளை கைப்பற்றி சென்று, மனுதாரர் மீது வெடிபொருள்கள் சட்டம் பிரிவு 9(B)(1)(b)–இன் கீழ் வழக்கு பதிவு செய்தனர். மனுதாரரிடமிருந்து மேற்படி பட்டாசுகள் கைப்பற்றப்பட்டதால் பட்டாசுகளை வாங்கிய நிறுவனத்திற்கு அனுப்ப இயலாமல் மனுதாரருக்கு பெரிய அளவில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், கைப்பற்றப்பட்ட பட்டாசுகள் மழையிலும், வெயிலிலும் சேதமடைந்து வருகிறது. கைப்பற்றப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டைப் பெட்டிகளை மனுதாரர் வசம் ஒப்படைக்கக் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில், மேற்படி வழக்கு சொத்துக்களான பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டை பெட்டிகள் போலீசாரால் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் பி.ஆர்.எண்.09/2026 என நம்பரிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கானது புலன் விசாரணையில் இருப்பதால் மனுதாரர் வசம் பட்டாசுகளை வழங்கும்பட்சத்தில் அவர் அதனை இலாப நோக்குடன் விற்பனை செய்ய வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரர் வசம் பட்டாசுகளை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தானது இந்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டு பி.ஆர்.எண்.09/2026 என நம்பரிடப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்டுள்ள பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டை பெட்டிகளை உரிய பராமரிப்பு இன்றி வைத்திருந்தால் அது பயனற்று போய்விடும் என்று மனுதாரர் தரப்பில் முன் வைத்த வாதத்தினை ஏற்று, கைபைப்பற்றப்பட்ட பட்டாசுகளின் சந்தை மதிப்பினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள Sundarlal Ambai Desai – Vs – State என்ற வழக்கின் தீர்ப்பு படி கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் வழக்கு சொத்தான பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டை பெட்டிகளை மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

1) மனுதாரர் தானும் தன்னுடன் இரு பிணையதாரரும் தலா ரூ.6,00,000/- தொகைக்கு பிணைப்பத்திரம் எழுதி தர வேண்டும்.

2) மனுதாரர்/சொத்தின்உரிமையாளர் ரூ.12,00,000/-(பனிரெண்டு இலட்சம்) இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி வைப்புத்தொகை பற்றிய உத்தரவு வழக்கு முடிவில் தீர்ப்பின் போது தெரிவிக்கப்படும்.

3) வழக்குச் சொத்துக்களான பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டை பெட்டிகளை புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த உத்தரவு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAYA BHARATHI Digitally signed by VIJAYA BHARATHI

நீதித்துறை நடுவர் எண்.2,
சிவகாசி.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2
சிவகாசி.
நாள் .11.2026

**மெமோ–**

பொருள் – வழக்குச் சொத்து – சிவகாசி கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.719/2025 பிரிவு 9(B)(1)(b) Indian Explosive Act – வழக்கில் பி.ஆர்.எண்.09/2026 இல் ஒப்படைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்தான பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டை பெட்டிகளை அதன் உரிமையாளரிடம் மனுவின் பேரில் இடைக்கால பொறுப்பில் வழங்குதல் – சம்பந்தமாக.

பார்வை – இந்நீதிமன்ற சி.ஆர்.எம்.பி.எண்.69/2026, நாள் 11.03.2026

பார்வையில் கண்ட இந்நீதிமன்ற உத்தரவின்படி வழக்குச் சொத்து – சிவகாசி கிழக்கு காவல் நிலைய குற்ற எண்.719/2025 பிரிவு 9(B)(1)(b) Indian Explosive Act – வழக்கில் பி.ஆர்.எண்.09/2026 இல் ஒப்படைக்கப்பட்டுள்ள வழக்கு சொத்தான பலதரப்பட்ட பட்டாசுகள் அடங்கிய 492 அட்டை பெட்டிகளை அதன் உரிமையாளரிடம் மனுவின் பேரில் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவு செய்யப்பட்டுள்ளது.

எனவே சிவகாசி கிழக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் மேற்படி வழக்குச் சொத்தினை அதன் உரிமையாளரான கீழ்கண்ட நபர் வசம் ஒப்படைத்து அதற்கான ஒப்புகையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உத்தரவின்படி

தலைமை எழுத்தர்,
நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம்,
சிவகாசி.

**பெறுநர்**
உதவி ஆய்வாளர்,
சிவகாசி கிழக்கு காவல்நிலையம்,
சிவகாசி.

**நகல்**
ஜானகிராமன் (வயது 36/2025),
த/பெ.கிருஷ்ணமூர்த்தி,
க.எண்.7 வனசக்தி நகர் விரிவாக்கம்,
நேருதெரு, கொளத்தூர்,
திருவள்ளூர்.